ஞானபாநு.

VOL 3. தொகுதி 3. | August 1915. ராக்ஷஸ ௵ ஆவணி ௴ | No 5. பகுதி 5.

நமது நாட்டம்.

"பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவ னுன்னருட் டூவெளி
தன்னை நாடுவன் தன்னந் தனியனே"

வென்றார் தாயுமானவர். பொன், பெண், மண் இம்மூவாசைகளையும் நான் கொள்ளவில்லை, உன்னையே விரும்புகின்றேன்; எனது உயிருக்குயிராயுள்ள பிரபுவே, உன்னைநான் தேடாவிடினும், நீ எப்பொழுதும் என்னைநாடி என்னிடத்திலேயே குடிகொண்டிருக்கிறாய்; உன்னுடைய அருட்பிரகாசமாகிய பரிசுத்தத் தன்மை எனக்குண்டாகுமாறு தயைபுரிக. என்று முள்ளவன நீயொருவனே. இதுவே மனிதர்களுடைய நித்தியப்பிரார்த்தனையாயிருக்கவேண்டும். நீ விரும்பினும் விரும்பாவிடினும் சாட்சாத் ஈஸ்வரன் உன்னிடத்தில் எப்பொழுதும் இருக்கிறார். நீ அவரை ஒருக்ஷண நேரமாகிலும் நினையாமலிருந்தும், அவர் உன்னைவிட்டுப் பிரியாமலிருக்க, நீ அவரை நினையாமலிருப்பது நியாயமா? நீ வேண்டாமென்று வெறுத்துத் தள்ளினாலும், ஈஸ்வரனில்லையென்று குதர்க்கம்பேசி நாஸ்திகனாய் விட்டாலும் அவர் உன்னை விடுவதில்லை. நீ அவரைப் புகழ்ந்தாலும் சரியே, இகழ்ந்தாலும் சரியே, பூஜித்தாலும் சரியே, நிந்தித்தாலும் சரியே, அவர் எப்பொழுதும் உன்னைவிடாது பற்றிக்கொண்டு, உன்னிடத்தில் உள்ளும்புறமும் வியாபித்து, உனது நாடி நரம்புகளுக்குள்ளும் நுழைந்து ரத்தத்துடனும் கலந்து உனது நினைப்புக்களுக்கும் ஆதாரமாகி உன்னிடத்தில் எங்கும் நிறைந்திருக்கிறார்; உனது ஹிருதய குகையில் ஆஸ்தானமண்டபம் இபற்றி, அரசுசெய்து கொண்டிருக்கிறார். உன்னிடத்தில் அந்தர்ப்பூதமாகி கோடி சூர்யப்பிரகாசத்துடன் தேஜோமயமாகி விளங்குகிறார்.

நீ அவரைக் காண்பதில்லை; அவர் உன்னிடத்தில் ஒன்றாகக்க கலந்து கொண்டிருக்கிறார்.

இங்ஙனம் உன்னை எப்பொழுதும் இடைவிடாது உன்னிடத்தில் ஆர்வமிருந்து ஐக்கியமாகி ஒன்றிக் கொண்டிருக்கும் அவரை நீ விரும்பாது, க்ஷணபங்குரமான, நிலையற்ற மண், பெண், பொன்னாதிய இவற்றினிடத்து ஆசைவைத்தல் பைத்தியக்காரத்தனமல்லவோ? மூடத்தனமல்லவோ? மண், பெண், பொன்னாதியவை உனது இறுதிக் காலத்தில் கூடவருவனவோ? ஒருகாலத்தில் நீ இவற்றையெல்லாம் விட்டுவிட்டுச் செல்லவேண்டியவனே. இதுவரை நீ இவற்றால் அநுபவித்த துக்கம் போதாதா? என்றும் மாறா இன்பமடைய வழிதேட நீ முயன்றாலும், துக்காஸ்பதமான பொருள்களையே மேன்மேலும் விரும்புகின்றாய். இவ்வஸ்துக்கள் அழிவுறுவனவென்று உனக்கு நன்றாகத் தெரிகின்றது; ஆயினும் அவற்றினிடத்திலேயே உனது மனத்தை எப்பொழுதும் செலுத்துகின்றாய். நீ இப்படிச் செய்வதற்குக் காரணம் யாதெனில், நீ இதுவரை எடுத்திருக்கும் அனந்தகோடி ஜன்மங்களாக உன்னிடத்தில் தடித்துவளர்ந்து கொழுத்திருக்கும் பிரபஞ்சவாசனையேயாகும். இந்த வஸ்துக்களெல்லாம் உனது பகிர்முகக்கண்களால் காணப்படுவன. உனது மனத்தை எங்கும் அலையவிடுகின்றாய்; சோர்வுறுகின்றாய். பொன், பெண், மண் இவற்றினிடத்து ஆசையை விட்டுவிடு; மனத்தைக்கட்டு; மனத்தை ஒரு நிலையிலிருத்து. மனமானது பட்டிநாய் போன்றது; விஷயபோகமாகிய மலந்தின்னும் இயற்கையுடையதே. ஒருவிநாடி நேரமேனும் சும்மாயிராது, எப்பொழுதும் சுற்றிச் சுற்றிச் சுழன்றுகொண்டேயிருக்கும்; பஞ்சேந்திரியங்களின் வாயிலாகப்பரந்து பாரினைத்தையும் வளைந்து கொண்டேயிருக்கும். இத்தகைய மூர்க்கத்தன்மையுடைய மனத்தை நீ கட்டுவாயானால், இந்தமனத்தை அந்தர்முகமாகத் திருப்பி ஆதிப்பரம் பொருளிடத்துச் செலுத்துவாயானால், நீ மேன்மை யடைவாய், இன்புறுவாய்.

* * * *

மண், பெண், பொன்னாதிய வற்றிற்கு உன்னிடத்து நீங்காதபற்றில்லை. நீ இச்சரீரத்தைவிட்டு, எமனுலகேகும்பொழுது, இவையுன்னுடன் கூடவருகின்றதில்லை ஆனால் ஈஸ்வரனோ நீ ஸ்வர்க்கத்திற்குச் சென்றாலும், நரகத்திற்குச் சென்றாலும், எப்பொழுதும்போல உன்னுடனேயே இருக்கிறார். எமகிங்கரர்கள் வந்து உன்னை இழுத்துச்செல்லும் பொழுதும் அவர் உன்னை விட்டுப்பிரிவதில்லை. இத்தகைய, அளவற்ற ஆசையுடன் உன்னை

யணைத்துக்கட்டிக்கொண்டு உன்னில் ஐக்கியமாகியிருக்கும ஈஸ்வரனை நீவிரும்ப ஆரம்பித்துவிட்டால், நீபிழைத்தாய்; சுபேச்சையாகிய பூமியில் பிரவேசித்துவிட்டாய். இப்பொழுது ஈஸ்வரன் உன்னில் ஐக்கியமாயிருக்கிறார். நீ ஈஸ்வரனில் ஐக்கியமாகி விட வேண்டியது தான்பாக்கி. இங்ஙனம் ஈஸ்வரனும் நீயும் ஒருவரில் ஒருவர் ஐக்கியமாகி, இருவரும் ஏகமாகிவிடுவது தான் இன்பாறு பூதி யெனப்படும். இவ்வின்பந்தான் என்றும் மாறுவின்பம். இவ்வின்பந்தான் எல்லோரும் உண்மையில் விரும்பும் இன்பம். இவ்வின்பத்தையடைதற்கு நீ புஸ்தகங்களையெல்லாம் படித்துப் புரட்டுக்களையெல்லாம் கற்றுக்கொள்ள வேண்டாம். ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகாது நீண்ட, கடுமையானபதங்களைப் பிரயோகித்து அவற்றிற்கு அர்த்தம் கூறி வாசிப்பதினால் உனக்கு இன்பம் உண்டாகாது. சதுர்வேதங்களையும் சாமர்த்தியமாகக் கற்றுத் தலைகீழாகச்சொல்லத்தயாராயிருக்கும் பண்டிதர்களிற் பலரும் அஞ்ஞானகூபங்களில் ஆழ்ந்துவிழ்ந்து அவஸ்தையுறுவதைப்பார்.

* * * *

அர்த்தம்தெரியாது, மனமும் அடங்காது மெணமெணவென்றுமந்திரங்களைக் கூறிப் பூஜைபுரிவதனால் பயன் ஒன்றுமில்லை; டாம்பீகத்தின் பொருட்டு வெளிவேஷமிட்டு யாகங்களைச் செய்வதினால் பயன் ஒன்றுமில்லை. பட்டிமாடுபோலக் கட்டுக்கடங்காமல்திரியும் இந்தப் பாழானமனத்தைக் கட்டியடக்கி அகமுகமாகத்திருப்பி ஆத்மவஸ்து வாகிய ஈஸ்வரனிடத்தில் செல்லும்படி செய்தாலொழிய, பேரின்பம் பெறுதற்கு வேறுவழியில்லை. இது நிச்சயம். பெண்டு, பிள்ளைகள், தோட்டம் துறவு என்று பிதற்றித்திரியும் பிராபஞ்சிகர்களே! உங்களுடையமனம் சாந்தியடையவேண்டாமா? உலகவிஷயங்களினின்றும் ஒரு நிமிஷமாவது ஒதுங்கி நில்லுங்கள். கண்டதேகாட்சி, கொண்டதேகோலம் என்று கர்வம் மிகுந்து கெட்டுவிடாதீர்கள். உள்ளே போனால் மூச்சு, வெளியேபோனால் போச்சு என்னும் உண்மையை உணர்ந்துகொள்ளுங்கள். என்றாவது ஓர்நாள் எமன் வந்துவிடுவான்; அவன் "போற்றினும்போகான்; பொருளொடுபோகான், நல்லாரென்னான் நல்குரவறியான்." ஆதலால், ஜாக்கிரதை! எம்பெருமானாகிய ஈஸ்வரனை நாடுங்கள். எங்கெங்கும் அவரைத் தேடுங்கள். எப்பொழுதும் அவரதுமகிமையையே பாடுங்கள். அவருடன் கூடுங்கள்.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரின் எதிரொலிகள்.

ஸ்ரீமான் எம். வி. நஞ்சுண்டராவ் அவர்கள் எழுதியது.

ஓர் நாள் இரவில் அழகிய நிலவு வெளிச்சத்தில் ஸ்வாமிகள் சென்னை, தெற்குக் கடற்கரையில் காலம் சென்ற ஸ்ரீமான் பட்டாச்சார்யாரவர்களுடைய பங்களாவின் தாழ்வாரத்தில் உட்கார்ந்து, கேதரி தேசத்து மகாராஜாவினுடைய அந்தரங்கக் கார்ய தர்சியாகிய ஸ்ரீமான் முனிஷி ஜகமோஹன லால் அவர்களிடத்தில் ஹிந்து பாஷையில் சம்பாஷித்துக்கொண்டிருந்தார் அப்பொழுது நான் சென்று ஸ்வாமிகளை நமஸ்கரித்துவிட்டு அங்கு உட்கார்ந்தேன்; திடீரென்று ஸ்வாமிகள் தமது ஸ்வபாவீக கம்பீரக்குரலில் ஸிவாஜியைப் புகழ்ந்து ஹிந்திபாஷையில் ஒருபாட்டுப்பாட ஆரம்பித்தார். அப்பாட்டின் பின்னடிகள் இரண்டின் அர்த்தமும் பின்வருமாறு:—காட்டுமரங்களுக்குக் காட்டு நெருப்பு எப்படியோ, மான்கூட்டங்களுக்கு வேங்கைப்புலி எப்படியோ, சிறப்புற்ற யானைகளுக்கு ஸிம்ஹம் எப்படியோ, இரவின் இருளுக்குச் சூர்யன் எப்படியோ, கம்ஸனுக்குக் கிருஷ்ணன் எப்படியோ, அப்படியே ஸிம்ஹமாகிய ஸிவாஜி யரசர் மிலேச்சக் கூட்டங்களுக்கு இருந்தார்.

அது ஒரு நீண்டபாட்டு; நான் அதைப் பிற்பாடு கற்றுக் கொண்டேன். ஆனல், ஸிவாஜி வஞ்சம் நிறைந்தகொள்ளைக்காரனென்றும் திருடனென்றும் நம்பவைத்துக் கொலை செய்தவனென்றும் மற்றும் நானெனது பள்ளிப்பர்வத்தில் படித்திருந்தேனுகலால் திடீரென்று ஸ்வாமிகளை நோக்கி, ஸிவாஜி விஷயத்தில் இந்தப்பாட்டுக்களும் ஸ்தோத்திரமும் எப்படி நியாயமாகும் என்று கேட்டேன். தன்னைப்போன்ற சிலரைச் சேர்த்து கொள்ளைகள்புரிந்து வஞ்சகத்தினுலும் மோசத்தினுலும் அதிர்ஷ்ட தேவதையின் சிறிது அநுக்கிரகத்தாலுமே ஒருராஜ்யத்தை ஸ்தாபித்தவனல்லவா ஸிவாஜி? ஸ்வாமிகள் உடனே பாட்டை நிறுத்திவிட்டு—அவருடைய முகத்தில் கோபம் ஜ்வலித்தது—என்னை நன்ருகப்பார்த்துக் கூறினதாவது:— "வைத்திய நிபுணரே, உமக்கு வெட்கமாயில்லையா? நீங்கள் மகாராஷ்டிரர், ஆயினும், சென்ற முந்நூறுவருஷங்களுக்குள் இந்தியாவில் உற்பவித்த ராஜாதிராஜனைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பது இவ்வளவுதான். ஸிவாஜி பரமசிவனுடைய அவதாரபுருஷர். அவர் பிறப்பதற்கு

முந்தியே அவரைப்பற்றி தீர்க்கதர்சனங்கள் உரைக்கப்பட்டிருந்தன. மிலேச்சர்களுடைய கொடுங்கோன்மையினின்றும் ஹிந்துக்களை மீட்பதற்கு மகாராஷ்டிரதேசத்திலிருந்த பெரியோர்களும் மகாத்துமாக்களும் இவரதுவரவை எதிர்பார்த்திருந்தார்கள். மோகலாயப்படைகளால் அழிக்கப்பட்டு நசித்துப்போன தர்மத்தை ஸ்தாபனம் செய்தவர் இவர். உங்களிடத்தில் அநுதாபம் வைக்கமுடியாத அல்லது உங்களுடைய நடையுடைபாவனைகள், பழக்கவழக்கங்கள் இவற்றைச்சிறிதும் அறிந்துகொள்ள முடியாத மதிக்கமுடியாத அந்நியர்களால் எழுதப்பட்ட இந்திய தேசச் சரித்திரத்தை நீங்கள் படிப்பதினால் வருகின்ற பலன் இதுதான். ஸிவாஜியைப்பார்க்கிலும் உயர்ந்த வீரனாவது, மகாத்துமாவாவது, பக்தனாவது அரசனாவது வேறுஉண்டோ? உங்களுடைய புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ளபடி சகலராஜ லட்சணங்களும் அமையப் பெற்றவர் ஸிவாஜி தான். இந்தியாவின் பிற்காலம் இப்பொழுதாவது பின்னராவது இப்படியிருக்கப்போகிறதென்பதை, அதாவது, ஏகச்சக்ராதிபத்தியத்தின்கீழ் ஸ்வதந்திரமநுபவிக்கும் தேசங்கள் பலசேர்ந்திருக்கும் என்பதை, முன்னரே குறிப்பிட்டுக் காட்டியவர் ஸிவாஜி தான்."

நான் பிரமித்து எனக்குத் தெரிந்தது இவ்வளவு தானா? வென்று என்னைத்தானே இகழ்ந்துகொண்டேன். ஆயினும், ஸ்வாமிகள் கோபத்தினால் கொதித்துக் கூறிய மொழிகளினால் அறியவேண்டுமென்ற எனது ஆவலைத்தடுக்க முடியவில்லை. ஸிவாஜியைப்பற்றி யாது கூறியபோதிலும் பீஜப்பூர் ஸமஸ்தானத்திலிருந்து அனுப்பப்பட்ட மகம்மதிய சேனைத்தலைவனாகிய அப்ஸுல்கான் என்பவனை ஸிவாஜி நம்பிக்கைத்துரோகம் செய்துகொன்ற விஷயத்தை நியாயமென்று சொல்வதற்கு ஒருவராலும் முடியாது என்று நினைத்தேன். ஸ்வாமிகள் இச்செய்கையை நியாயமானது என்று எப்படிக் கூறுவார், பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் ஸிவாஜியினுடைய ஜீவசரித்திரத்தைப் பற்றிக்கொஞ்சம்சொல்லும்படி நான் அவரைக் கேட்டுக்கொண்டேன்.

அப்பொழுது ஸ்வாமிகள் உற்சாகமும் சந்தோஷமும் மிகுந்து ஸிவாஜியின் ஜீவசரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லத் தொடங்கினார். நாங்கள் ஆவல் மிகுந்து அதிககவனத்துடன்

கேட்டோம். அப்பொழுது ஸ்வாமிகளுடைய வாக்கியங்கள் ஆத்திரமும் அன்பும் தயையும் நிரம்பியிருந்தன. அவர் அப்பொழுது பேசியவற்றை ஒருவரும் குறித்துக் கொள்ளவில்லை; நானும் குறித்துக்கொள்ளவில்லை; அப்பொழுது என் மனம் ஏகாக்கிரமாகி அவரது வசனங்களையே கவனித்துக் கொண்டிருந்து விட்டது. ஆதலால், அவர் கூறியவையெல்லாம் என்மனத்தில் நன்றாகப் பதிந்து கொண்டன. அவர் பேசியவற்றின் சாராம்ச பின்வருவது.

"வைத்திய நிபுணரே, நமது பள்ளிக் கூடங்களின் அந்நியர்களால் மட்டும் எழுதகப்பட்டுள்ள இந்தியதேசச் சரித்திரம் நமது பையன்களுக்குக் கற்பிக்கப் படுகிறதென்பது பரிதாபகரமான விஷயம். மகாராஷ்டிர சரித்திரத்தை யெழுதியுள்ள அந்நிய ஆசிரியர்களால் ஒரு பொழுதும் அவர்களிடத்துள்ள ஒருதலைச் சார்பான எண்ணத்தை யகற்றவும் முடியாது; ஸிவாஜியினுடைய செய்கைகளின் உட்கருத்தையும் உண்மைப்பெருமையையும் குணத்தையும் அறியவும் முடியாது. விரோதத்தினாலும் பொறாமையினாலும் மகம்மதிய சரித்திரகர்த்தாக்கள் ஸிவாஜியைக் கொள்ளைக்காரனென்று தூஷித்து எழுதியிருக்கிறார்கள்; அந்நிய நாட்டு ஆசிரியர்கள் அவற்றை நம்பி எழுதுகிறார்கள். ஆகையால் நாம் அவர்களைக்குற்றம்சொல்ல முடியாது. அநேகமகாராஷ்டிரச் சரித்திரகர்த்தாக்களும் ஸிவாஜியைப்பற்றி எழுதியிருக்கிறார்கள்; ஆனால் இவர்கள் தங்களுடைய புராணக்கொள்கையின்படி ஸிவாஜியை மகம்மதியக் கொடுங்கோன்மையினின்றும் 'ஹிந்துக்களை விடுவிக்கவந்த ஈஸ்வராவதாரமென்று கருதியிருந்தார்கள். அந்நிய நாட்டு ஆசிரியர்கள் ஹிந்துக்களால் எழுதப்பட்டவையை மூடபக்தியுடன் எழுதப்பட்டவையென்று தள்ளிவிட்டு, மகம்மதியர்கள் எழுதியிருந்தவற்றையே பெரும்பாலும் நம்பினார்கள். இது இயற்கைதான். ஆனால் நல்லவேளையாக, அவுரங்கசீப், ஸிவாஜி, பீஜப்பூர் அரசர்கள் இவர்களுடைய சரித்திரங்களைப் பற்றிப் பாரசீகபாஷையில் சில எழுத்துப்பிரதிகள் இருக்கின்றன. அவை ஸிவாஜியின் செய்கைகளில் தெய்வீகத்தன்மையை நம்பாதபோதிலும், மகாராஷ்டிரர்களுடைய சரித்திரத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் சரியென்று ரூபிக்கின்றன. தேசாபிமான முள்ளமாணவர்கள் இவ்வெழுத்துப் பிரதிகளையெல்லாம் நன்றாக

ஆராய்ந்து, புதியதாக இந்தியதேசச் சரித்திரம் ஒன்று எழுதினால் அது உலகோபகாரமாயிருக்கும்" என்று ஸ்வாமிகள் சொன்னார்.

"ஆனால் ஸிவாஜியினுடைய ஜீவசரித்திரத்திலிருந்து சில முக்கிய விஷயங்களைப்பற்றிக் கூறும்முன், ஸிவாஜி பிறப்பதற்கு முந்தி இந்தியா எந்த ஸ்திதியிலிருந்தது என்பதை கவனிப்போம். மகாராஷ்டிர ராஜாங்கம் கொடுங்கோன்மை யதிகரித்தலினால் ஆச்சர்யப்படத் தக்கவிதமாகத் திடீரென்று உண்டாகின்ற ராஜாங்கப்புரட்சிகளில் ஒன்றாகும். அவுரங்கசீபினுடைய ஆதிபத்தியத்தில் மொகலாய ராஜாங்கமானது இந்தியாமுழுதும் பரவியிருந்தது. அவுரங்கசீப் சாமர்த்தியசாலி; ஆனால் கொடுங்கோன்மையாளன். மகாராஷ்டிரர்கள் சுற்றிலும் மலைகளால் சூழப்பட்டிருக்கும் தட்சிணதேசத்தில் வசிக்கும் ஊக்கமும் சுறுசுறுப்புமுள்ள ஜனங்கள். முந்நூறு வருஷங்களாக மகம்மதியர்கள் படையெடுத்துப்படையெடுத்து தேசத்தையெல்லாம் அழித்துச் சின்னாபின்னப்படுத்திப் பற்பலவித பயங்கரமான அக்கிரமங்கள் புரிந்திருந்தார்கள்; இந்தஞாபகம் ஜனங்களுக்குப் பலமாயிருந்தது. இப்பொழுது கொடுமையாளனாகிய அவுரங்கசீபினுடைய படைகள் இன்னும் தட்சிணதேசத்தைப் படையெடுக்கப் போகின்றனவென்று கேள்விப்பட்டு திகிலடைந்திருந்தார்கள். முன்னமேயே கர்மம் குன்றிவிட்டது; மதம் க்ஷீணித்துவிட்டது. பூமியிலுள்ள புண்ணிய புருஷர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இத்தகைய கொடுமைகளினின்றும் விடுபடவேண்டுமென்று பெரியோர், சிறியோர், ஆண், பெண் அடங்கலும் ஈஸ்வரனைப்பிரார்த்தித்தார்கள். காலமும் அநுகூலமாயிருந்தது. ஸிவாஜி தோன்றினார்; மகாராஷ்டிர ராஜாங்கத்தை ஹிந்துஸ்தானத்தில் மிகப் பலமாக ஸ்தாபித்தார்."

(இன்னும் வரும்)

ஸ்வாமி விவேகாநந்தரின் கடிதம்.

[பிரஹ்மஸ்ரீ ராமச்சந்திரசாஸ்திரிகள் மொழிபெயர்த்தது.]

காலிபோர்னியா
18-4-1900.

வேலை எப்பொழுதும் கஷ்டமாயிருக்கிறது—எனது வேலை ஒரேயடியாய் நின்றுவிட வேண்டுமென்றும் எனது மனம் முழுதும் "மாதா" வினிடத்தில் ஐக்கியமாய் விடும்படிக்கும் எனக்காகப் பிரார்த்தனைசெய். அவளுடையவேலை இன்னதென்று அவளுக்குத் தெரியும்.

நான் சௌக்கியமாயிருக்கிறேன்—மனோ நிலைமையில் மிகவும் சௌக்கியமாயிருக்கிறேன். சரீர சுகத்தினும் அதிகமாக ஆத்மசுகத்தை யநுபவிக்கிறேன். யுத்தங்கள் தோற்கப்பட்டன, ஜெயிக்கப்பட்டன. நான் எனது சாமான்களையெல்லாம் மூட்டைகட்டிக் கொண்டு உத்தமராகிய நிவிருத்தி கர்த்தாவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். "சிவ, சிவ, எனது தோணியை அக்கரைக்குக் கொண்டு செல்".

கடைசியாக, தக்ஷிணேஸ்வரத்தில் அரசமரத்தடியில் ராமகிருஷ்ணருடைய அற்புத வாக்கியங்களை ஆச்சர்யமும் ஆனந்தமும் மிகுந்து கேட்டுக்கொண்டிருந்த பையன் தான் நான். அது தான் எனது உண்மையான ஸ்வபாவம். வேலைகளும் சுறுசுறுப்பும், நன்மைசெய்தலும் இவையெல்லாம் மேலே பொருந்தவைத்துக் கொள்ளப்பட்டவை. எனது னத்தை மயக்குகின்ற அவருடைய குரலை, அதே பழய குரலை நான் மறுபடியும் கேட்கின்றேன். பந்தங்கள் தெறிக்கின்றன; ஸ்நேகம் மரிக்கின்றது, வேலை ருசியற்றதாகிறது,—ஜீவித காலத்தில் மயக்கம் இல்லை; சற்குருவினுடைய சப்தம்தான் கேட்கின்றது:—"பிரபுவே,நான் வருகிறேன், நான் வருகிறேன்." "இறந்தவர்கள் இறந்தவர்களைப் புதைக்கட்டும், நீ என்னைப் பின்பற்றி வா". "அரிய பிரபுவே, நான் வருகிறேன், நான் வருகிறேன்"

ஆம், நான் வருகிறேன்—நிர்வாண நிலைமை எனக்கு முன் இருக்கிறது, ஒருகுமிழி கூடயில்லாத, ஒரு மூச்சுக்கூடயில்லாத அகண்ட சாந்த சமுத்திரத்தை சில வேளைகளில் அநுபவிக்கிறேன்.

நான் பிறந்ததற்காகச் சந்தோஷிக்கிறேன்,—நான் கஷ்டப்பட்டதற்காகச் சந்தோஷிக்கிறேன், பெருந்தவறுகளைச் செய்ததாகச் சந்தோஷிக்கிறேன், உபசாந்தியடையப் போகிறேனென்று சந்தோஷிக்கிறேன். நான் கட்டுப்பட்டவர்களாக ஒருவரையும் விடவில்லை. நான் பந்தங்களை யெடுத்துக் கொள்கிறதில்லை. இந்த சரீரம் விழுந்து நான் விடுபட்டாலும் சரியே அல்லது சரீரத்திலேயே ஸ்தந்திரம் அநுபவித்தாலும் சரியே, பழையவன் போய் விட்டான், ஒரேயடியாகப் போய்விட்டான். இனிமேல் ஒரு பொழுதும் வரமாட்டான்.

சாரதி, குரு, தலைவர், உபாத்தியாயர் போய்விட்டார்—பையன், மாணவன், வேலையாளன் பின்னால் விடப்பட்டிருக்கிறான்.

தலைவனென்ற ஸ்தானத்தை நான் விட்டு விட்டு நிரம்ப நாட்களாய் விட்டன. என் வார்த்தைகளைப் பேசுவதற்கு எனக்குப் பாத்தியதையில்லை—நான் எல்லாவற்றையும் ஒதுக்கிக் கொண்டிருந்தேன்; அப்பொழுது தான் நான் எனது ஜீவிதத்தில் பேரின்பாநுபூதி யடைந்தகாலம்—நான் மறுபடியும் ஒதுக்கிக்கொண்டிருக்கிறேன்—தலைக்கு மேலே பிரகாசமான சூரியன், சுற்றிலும் பசும்பயிர்க் கூட்டங்கள், வெயிலில் எல்லாம் மிக அமைதியாயும் நிச்சலனமாயும் இருக்கின்றன—நதியின் நடுமத்தியில் சோர்வுற்று நான் மறுபடியும் ஒதுக்கிக் கொண்டிருக்கின்றேன. அத்தியாச்சர்யமானதும் அது பிரமையே யென்று உனக்கு நிச்சயத்தை யுண்டுபண்ணுவதுமான அமைதியை எங்கே கெடுத்து விடுவேனோ வென்று பயந்து எனது கைகளாலாவது கால்களாலாவது தண்ணீரில் அடிக்கத் துணிகின்றதில்லை.

எனது வேலையின் பின் பேராசையிருந்தது; எனது அன்பின் பின் வசிகரம் இருந்தது; எனதுசுத்தத்தின்பின் பயம் இருந்தது; எனது தலைமையின் பின் அதிகார ஆசை இருந்தது. இப்பொழுது அவையெல்லாம் மறைந்து கொண்டிருக்கின்றன; நான் ஒதுக்குகிறேன். நான் வருகிறேன்—தாயே, நான் வருகிறேன். சுகமான மார்பின்மீது நீ எங்கெல்லாம் என்னைக்கொண்டு செல்கிறாயோ அங்கெல்லாம் மிதந்துகொண்டு, நிச்சப்தமான, அற்புதமான, ஆச்சர்ய பூமியில், இனிமேல் செய்கைசெய்பவனல்லவென்று, பார்ப்பவனாக வருகிறேன்.

ஆ! அமைதி மிகுந்திருக்கிறது—எனது எண்ணங்களெல்லாம் எனது சொந்த ஹிருதயத்தினுள்ளே வெகு வெகு தூரத்திலிருந்து வருகின்றனபோலத் தோன்றுகின்றன. அவை தூரத்திலிருந்து லேசாகக் கேட்கப்படும் மெதுவான வார்த்தைகளைப்போலத் தோன்றுகின்றன; நித்திரை வருவதற்குமுன் சில நிமிஷங்களில், வஸ்துக்கள் பிரத்தியட்சமாகியும் சாயைகளைப் போலத் தோற்றுகின்ற பொழுது—பயமின்றி, நேசமின்றி, ஆத்திரமின்றி—உண்டாகின்ற சுகம், பேரின்பசுகம் ஒவ்வொன்றினிடத்தும் இருக்கிறது. படங்களாலும் சித்திரச்சிலைகளாலும் சூழப்பட்டுத் தனித்திருக்கும் பொழுது உண்டாகும் சுகம். நான்வருகிறேன், பிரபுவே, நான் வருகிறேன்.

உலகம் உள்ளது; ஆனல் அழகுள்ளதன்று, அவலட்சணமானதுமன்று; ஆனல் உள்ளுணர்ச்சியைச் கிளப்பாத இந்திரிய விஷயங்கள் தாம். ஆ! ஆநந்தம்! ஒவ்வொன்றும் நன்றாயும் அழகாயும் இருககின்றது; ஏனென்றால் அவற்றிற்கும் எனக்கும் உள்ள சம்பந்தம் நீங்கிக்கொண்டிருக்கிறது---முதலாவது எனது சரீரம்—ஓம் அந்த உண்மை.

உனது விஸ்வாசமுள்ள விவேகாநந்தர்.

தேசத்துரோகி ஜயச்சந்திரன்.

[பிரஹ்மஸ்ரீ எஸ்-ஆர் வீரராகவ சர்மா அவர்கள் எழுதியது.]

ஹிந்துக்கள் மகாபக்தி சிரத்தையுடன் பூஜிக்கும் ஸ்ரீபகவந் நாமத்தைத் தரித்த ராஜன் ஒருவன் இப்பொழுது "அயோத்தியா" என்று வழங்கும் மாகாணத்தில் கன்யாகுப்ஜம் என்னும் தேசத்துக்கு அரசனுயிருந்தான். ஆ! இவன் பெயருக்கேற்ற குணங்கள் இவனிடம் பொருந்தியிருக்குமாயின், எவ்வளவு நேர்த்தியா யிருந்திருக்கும்! ஸ்ரீபகவான் ராமச்சந்திருடைய கம்பீரமான குணங்கள், வீர்யம், செளர்யம், தேசபக்தி, பெருந்தன்மை, சர்வப்பிரகிருதி சிருஷ்டிகளிடத்திலும் அன்பு, அடைக்கலம் புகுந்தவாகளைக் காப்பாற்றல், இம்மாதிரியான சிறந்தகுணங்கள் இவ்வரசனிடத்தில் குடிகொண்டிருந் திருக்குமாயின், அவன் தனது குலத்துக்கும் தேசத்துக்கும் ஒரு திலகமாய் விளங்கியிருந்திருப்பானன்றோ?

இவ்வரசன் ஆண்டது மகம்மதிய அரசனுகிய மகம்மது கோரி படையெடுத்து வந்த சமயம். இவனுக்கு ஒரு அழகிய புத்திரி யிருந்தாள்; இப்பெண் அழகில் உயர்ந்தவள், குணத்தில் சிறந்தவள், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் பொருந்தப்பெற்ற பெண்மணி. இப்பெண்ணுக்கு ஏற்ற புருஷனைத் தெரிந்தெடுத்து விவாகம் செய்விக்கும் பொருட்டு, ஜயசந்திரன் ஒரு ஸ்வயம்வரம் கூட்டினுன். சகல அரசர்களும் தங்கள் பரிவாரங்களுடன் வந்து கூடினர்கள். இதற்காக வென்று விசித்திரமா யலங்கரிக்கப்பட்ட மகாமண்டபத்தில் அனைவரும் அழகிய ஆடையாபரணுதிக ளணிந்து கொலு வீற்றிருந்தார்கள். டேல்ஹி அரசனுகிய பிருதிவி ராஜன் மாத்திரம் வரவில்லை. பிருதிவி தன்னை அவமானம் செய்துவிட்டதாக நினைத்து, ஜயசந்திரன் கோபத்தால்குதித்தான். பிருதிவி ராஜனை பதிலுக்குப் பதில் அவமானம் செய்ய வெண்ணி, அவனைப்போல் உடனே பொரு விக்கிரகம் செய்வித்து, ஒரு பணியாளனைப்போல அவ்விக்கிரகத்திற்கு உடையிட்டு, அந்த விக்கிரகத்தை அந்த மகாமண்டபத்தின் வாசலில் நிறுத்திவைத்தான். புருஷனைத் தேர்ந்தெடுப்பதற்காக ஸம்யுக்தை புறப்பட்டாள். ரதிதேவியோ வென்று பார்த்தவர்கள் பிரமிக்கும்படியாக, அவள் ஸ்யவம்வர மண்டபத்துக்குள் நுழைந்து அரசர்களில ஒவ்வொருவரையும் ஏறிட்டுப் பார்த்து அவர்களில் ஒருவரையும் விரும்பாமல் எல்லோரையும் கடந்து சென்று கடைசியாக பிருதிவி ராஜனுடைய பொம்மையிருக்கு மிடத்திற்கு வந்தாள்; பார்த்தாள் பொம்மையை; தனது கழுத்தி லிருந்த புஷ்பமாலையைச் சட்டென்று கழற்றி அப்பொம்மையின் கழுததில போட்டுவிட்டாள். உடனே அங்கு ஒரு ஆரவாரம் உண்டாயிற்று. இவளுடைய செய்கையைப் பார்த்து எல்லோரும் ஆச்சர்யப்பட்டார்கள. ஜயசந்திரனுக்குக் கண்கள் சிவந்து விட்டன; மீசைகள் துடித்தன; கோபத்தினல் பல்லை நறநறவென்று கடித்தான்; தனது புத்திரி ஸம்யுக்தையைக் காராக்கிரகம் சேர்ப்பிக்கும்படி யுடனே உத்தரவு கொடுத்துவிட்டான். அப்படியே சேவகர்கள் ஸம்யுக்தையை இட்டுச்சென்று சிறைச்சாலையில் அடைத்தார்கள்.

இச்சங்கதி டேல்ஹியில் பிருதிவி ராஜனுக்கு எட்டியது. அவன் உடனே தனது சைந்யங்களை யெல்லாம் சேர்த்துக்

கொண்டு புறப்பட்டு கன்யகுப்ஜம் சேர்ந்து ஜயசந்திரனைத் தோற் கடித்து ஸம்யுக்தையைச் சிறையினின்றும் மீட்டுக்கொண்டு தனது நகரத்திற்குச் சென்று மகாகுதுகலத்துடன் விவாகம் முடித்துக் கொண்டான். ஜயசந்திரனுக்கு வெட்கத்தினாலும் கோபத்தினாலும் மனம் கொதித்துக்கொண் டிருந்தது; பிருதிவி ராஜன்மீது பழிக்குப்பழி வாங்கும்காலம் எப்பொழுது வருமோ வென்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். பிருதிவி ராஜனுடன் நேருக்கு நேர் நின்று யுத்தம் செய்வதற்கு தைர்யமில்லை ஜயசந்திரனுக்கு. இங்ஙனம் சின்னாட்கள் சென்றன.

அப்பொழுது மகம்மத் கோரி இந்தியாவின்மீது படையெடுத்து வந்தான். சென்றவிடமெல்லாம் மகாகோரமான தீச்செயல்களைச் செய்துகொண்டும் சிறுவர், கிழவர், ஸ்திரீகள் முதலியோரை இரக்கமில்லாமல் நமனுக்கு இரைபாக்கிக் கொண்டும், கோவில்களை யெல்லாம் இடித்துத்தள்ளிக்கொண்டும் எமகிங்கரன் போல வருகின்ற மகம்மது கோரியின் கொட்டத்தை யடக்குவதற்கு ஜயசந்திரனுடைய கொட்டத்தை யடக்கிய டெல்ஹி அரசனை பிருதிவி ராஜன் புறப்பட்டான். இந்த ரஜபுத்திரசிங்கம் சகல அரசர்களையும் ஒன்றுகூட்டி, பெருத்ததோர் சேனையைத் திரட்டி மகம்மது கோரி யுடன் பயங்கரமான போர்புரிந்து அவனைப் புறமுதுகிட்டோடச் செய்து வெற்றியும் கீர்த்தியும் பெற்றான். பிருதிவி ராஜன் அடைந்த இந்த ஜயமானது ஜயசந்திரனுடைய மனத்தை ராமபாணம்போலத் துளைத்தது.

மேல் நடந்த யுத்தத்தில் ஜயசந்திரன் ஒரு பக்கத்திலும் சேரவில்லை. அப்பொழுது ஜயசந்திரனிடத்தில் பொறாமை, அழுக்காறு முதலிய தீயகுணங்கள் முதிரவில்லை. இன்னும், இந்த யுத்தத்தில் பிருதிவி ராஜன் அடிபட்டு அழிந்து விடுவானென்று ஜயசந்திரன் மனப்பூர்த்தியாக நம்பியிருந்தான். பிருதிவிராஜன் வெற்றிபெறவே ஜயசந்திரனுக்குச் சரியான ஊண் உறக்கம் கிடையாது. பிருதிவி ராஜனுடைய பெயரும் கீர்த்தியும் ஓங்கியுயர்ந்து ஜ்வலிக்கிறது! இவ்வக்கினி ஜயசந்திரன் மனத்தைத் தகிக்கிறது! இனிமேல் தாங்க முடியாது! மானம் இழந்தான்! மாதுர்பக்தி குன்றிற்று! தேசத்துக்குப் பொது சத்துரு வுடன் ரகஸ்யமான தூதுகள் நடந்தன. பிருதிவி ராஜன் கொட்டமடங்க வேணும்! ஆ! என்ன மகத்துவம் இத்தீய குணங்களுக்கு! எவ்

வளவு தேவலமான செயல்களைச் செய்யத் தூண்டிவிட்டு விடுகின்றன! கோபம் பாபம் சண்டாளம்! என்ன அவிவேகம், தன் சகோதரனை ஒருவன் கொட்டத்தையடக்க, தங்களுக்குப் பொதுசத்துருவானவன் காலில் விழ்வது!

மகம்மது கோரிக்குத் தான் பகிரங்கமாக உதவி புரிவதாக வாக்களித்து மறுபடியும் தன் தேசத்தின்மீது படையெடுத்து வரும்படியாக ஜயசந்திரன் மகம்மது கோரியை அழைத்தான். மாதுர்ப்பூமியை மாற்றானிடத்தில் காட்டிக்கொடுக்கத் தீர்மானித்த மாதுர்த்துரோகி ஜயசந்திரன் உள்நாட்டிலும் குழப்பங்களை யுண்டாக்கி விட்டான். சில அரசர்கள் இவனுடைய துர்ப்போதனைக்குட்பட்டார்கள். சௌரியம், வைராக்கியம், பராக்கிரமம் முதலிய நற்குணங்கள் அமைந்த சில அரசர்கள் மட்டுமே பிருதிவி ராஜனுடன் சேர்ந்தார்கள். மகம்மதுகோரியும் பெரும் சைந்நியங்களுடன் வந்துவிட்டான். பிருதிவி ராஜனும் அவனைச் சேர்ந்த அரசர்களும் தங்கள் உயிர் உள்ளமட்டும் தங்களுடைய நாட்டையும் ஸ்திரீகளின் கௌரவத்தையும் காப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

யமுனை நதிக்கரையில் ஒரு கூடாரம் அடிக்கப்பட்டிருந்தது. அது ஜயசந்திரனுடையது. ஒரு நாள், சத்துருவினிட மிருந்து ஒரு தூதர் வந்திருக்கிறாரென்று ஜயசந்திரனுக்குத் தெரிவிக்கப் பட்டது. ஜயசந்திரன் அந்த தூதரை உள்ளே விடும்படி ஆக்ஞாபிக்கவே, தூதர் அரசன் முன்னிலையில் சென்றார். அரசனும் தூதரும் தனிமையா யிருந்தார்கள். ஆண்வேஷம் தரித்து தூதர்போல வந்திருந்த ஸ்திரீரத்தினமாகிய ஸம்யுக்தை தனது பிதாவாகிய அரசனைப்பார்த்து, "ஏ, பிதாவே, நான் தங்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறவந்தேன் என் தேசத்துக்காக நான் யுத்தம் செய்யப்போகிறேன். உங்கள் ஆசீர்வாத பலத்தினால் தான் சத்துருவை எதிர்க்கவேண்டும். பெற்றோருடைய ஆசீர்வாதம் இல்லாவிடில் ஜயம் கிடைப்பதருமை" யென்று கூறினாள். இச்சொற்களை கேட்ட ஜயசந்திரன் பிரமித்துச் சற்றுநேரம் மௌனமா யிருந்துவிட்டுத் தனது புத்திரியை உற்றுநோக்கி—"நீதான் இதற்கெல்லாம் காரணம், சென்றுவிடு. யுத்தத்திற்குவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டுவிட்டன; இனிமேல் என்னால் உனது அபீஷ்டத்தை நிறைவேற்ற முடியாது" என்று கூறினான். 'புத்

திரியானவள் கதறிக்கொண்டு பிதாவின் அடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து "ஏ, பிதா! உன் தேசத்தைச் சற்று பட்சமாகப்பார். அபலைகளான ஸ்திரீகளின் கௌரவத்தைக் காப்பாற்று;பரிதாபகரமான கொலைகட்குக் காரணமாகாதே; தேவாலயங்களெல்லாம் இடிக்கப்பட்டுவிடும்.........என்று இம்மாதிரி கல்லையும் உருக்கும்படியாகச் சொல்லிக்கொண்டிருந்த பொழுதே ஜயசந்திரன் "சென்றுவிடு இனிமேல் என்னால் உன் அபீஷ்டத்தை நிறைவேற்றமுடியாது" என்று மறுபடியும்கூறினான். தனது விண்ணப்பங்களெல்லாம் வீணாகப் போகவே, ஸம்யுக்தையானவள் வெறியுற்ற ஸிம்ஹம்போலத் தனது பிதாவைநோக்கி "அப்பா, நம்முடைய சிரேஷ்டமான வம்சத்தில் பிறந்து இறந்த ஸிம்ஹங்களின் பெயரையும் கீர்த்தியையும் மங்கச்செய்யும் கேவலமான செய்கையை நீ செய்யும் முன் உன் புதல்வியையே கொன்றுவிடு. மகா கேவலம்! பிதா! கேவலம்! நீமகம்மதியர்களுடன் சேர்ந்து உனது தாய்நாட்டை அவர்களுக்கு விற்பது!" என்று கர்ச்சித்தாள். ஜயசந்திரன் யாதொன்றும் பேசாமல் சட்டென்று கூடாரத்துக்கு வெளியேசென்று, தூதரைப்பத்திரமாக அவரிருப்பிடம் சேர்ப்பிக்கும்படி தன் சிப்பந்திகளுக்குக் கட்டளையிட்டு விட்டு வெளியேபோய் விட்டான்.

ஸம்யுக்தை தனது புருஷனிடம்சென்று அவரிடம் விடைபெற்று டேல்ஹியிலுள்ள ஸ்திரீகளின் கற்பையும் கௌரவத்தையும் காக்கும்பொருட்டு அங்கு சென்றாள். சுத்தவீரனான பிருதிவி ராஜன் பயங்கரமாக யுத்தம்செய்து யுத்தகளத்தில் மடிந்தார்; ரஜபுத்திர ஸ்திரீகள் அனைவரும் ஓமகுண்டம் வளர்த்து அக்கினிப்பிரவேசம் செய்தார்கள். புருஷர்கள் தங்களுடைய தேசத்தின் ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றத் தங்கள் உயிரைக் கொடுத்தார்கள். யுத்தத்தில் தங்கள் மானத்தை காப்பாற்றிக் கொள்ள ஸ்திரீகள் அக்கினிப்பிரவேசம் செய்தார்கள். மாதுர் துரோகி ஜயசந்திரன் மகத்தான துக்கத்தை யடைந்தான், தான் செய்தபிழைக்கு வருத்தப்பட்டான். ஆயினும், என்னபிரயோசனம்? அவனவன் செய்த பிழையின் பலனை அவனவன் அநுபவித்துத் தானே தீரவேண்டும். ஜயசந்திரன் செய்த குற்றத்திற்குத் தண்டனை "சிரச்சேதம்" தான். ஈஸ்வரனும் இந்த மகாபாபிக்குத் தகுந்த தண்டனையை நிஷ்கண்டகனான மகம்மதுகோரி மூல

மாகவே நிறைவேற்றிவிட்டார். மகம்மதுகோரி ஜயசந்திரனுடைய ராஜ்யங்களையும் அபகரித்துக்கொண்டு அவனையும் சிரச்சேதம் செய்து விட்டான். "கெடுவான் கேடு நினைப்பான்".

ஜெர்மன் சக்கரவர்த்தியின் சொத்து.

ஜெர்மன் சக்கரவர்த்திக்கு சொத்துக்கள் ஏராளமாயுள்ளன. சிறிது காலத்திற்கு முன்பு ஹேர் ருடால்ப் மார்ட்டின் என்னும் ஜெர்மனிய நிதி நிபுணர் ஜெர்மனி தேசத்தில் ஜெர்மன் சக்கிரவர்த்தியைப் பார்க்கிலும் பெருத்த தனவந்தர் எவரும் இல்லையென்றும் ஜெர்மன் சக்கரவர்த்திக்கு ஏறக்குறைய இரண்டுகோடி பவுன் சொந்த சொத்து இருக்கிறதென்றும் இந்த சொத்திலிருந்து இவருக்கு வருஷாவருஷம் பத்து லட்சம் பவுன் வருமானம் வருகிறதென்றும் கூறினர்.

ஜெர்மன் சக்கரவர்த்தியின் மூத்த குமாரனாகிய இளவரசருக்குச் சொந்தமாக 1000000 பவுன் சொத்து உண்டு. இதிலிருந்து இவருக்கு வருஷ வருமானம் 50000 பவுன். ஜெர்மன் சக்கரவர்த்தியாரின் சகோதாருக்கு 500000 பவுன் சொத்து உண்டு. இவருக்கு வருஷ வருமானம் 3000 பவுன். ஜெர்மன் ராஜ குடும்பத்தாருக்கு எல்லாம் சேர்த்து மொத்தமாக ஏறக்குறைய 25000000 பவுன் உண்டு.

ஜெர்மன் சக்கரவர்த்தி பற்பல வியாபாரங்களிலும் தமது பணத்தை யிட்டு விருத்தி பண்ணியிருக்கிறார். அநேகம் ஜெர்மன் கப்பற் சங்கங்களில பெரும்பங்குகள் எடுத்திருக்கிறார். ஜெர்மன் மேற்கு ஆப்பிரிக்காவில் வைரக்கனிகளில் மிகுந்த ஆசையுள்ளவர். இவருக்குச் சொந்தமாக 5500000 பவுன் பெறும்படியான காடுகளும் பூமிகளும் உண்டு. உபயோக மற்ற அநேக சில்லரை வியாபாரங்களில் ஏதேஷ்டமாகப் பணத்தை வாரி இறைத்திருக்கிறார். மேற்கு ப்ரஷ்ஷிய நாட்டில் குதிரைகளை வளர்த்து வியாபாரம் செய்யும்படி அதிக பணம் இட்டிருக்கிறார். இந்த வியாபாரத்தில் இவருக்கு நல்ல லாபம். ஹானோவர் என்ற நகரில் கள், சாராயம் முதலியன வடிக்கும் சாலையொன்றிலிருந்து இவருக்கு நல்ல வரும்படி கிடைக்கிறது. காடினேன் என்ற ஊரில் தனது சொந்தப் பூமியில் மட்கலம்வனையும் சாலையொன்று ஸ்தாபித்திருக்கிறார்.

ஜெர்மன் சக்கிரவர்த்திக்கு பேர்லின் மாநகரில் 2000000 பவுன் பெறும்படியான 40 அரண்மனைகளும் நாட்டுப்புறத்து வீடுகளும் ஏறக்குறைய 1000000 பவுன் பெறும்படியான வேறு வித சொத்துக்களும் உண்டு. அவருடைய தேசத்திற்குள் ஏழு நாடுகளில் எழுபத்து நான்கு இடங்களில் 500000 ஏகரா அளவுள்ள பூஸ்திதியுண்டு.

ஜெர்மன் சக்கிரவர்த்தி ஒருபெரிய யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கியது முதல் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் அக்கரையிலுள்ள அமெரிக்கா தேசத்தில் ஏராளமான சொத்துக்களை யிட்டிருக்கிறாரென்று கேட்க ஆச்சர்யமாயிருக்கிறது. அமெரிக்காவில் பெரிய பூஸ்திதி வந்தர்களில் ஜெர்மன் சக்கரவர்த்தியும் ஒருவர். ஆனால் அந்த பூஸ்திதிகளெல்லாம் இவருடைய பெயரிலில்லை. இவருக்குக் கானடா தேசத்து மேற்குப் பாகத்திலும் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. வான்கோவர் பிரதேசத்தில் ஒரு ஜில்லாவில் மிகுந்த பூஸ்திதிகள் ஜெர்மன் சக்கிரவர்த்திக்கு இருக்கின்றனவாம். அவ்வூரிலுள்ள வரிகட்டுவோர் சங்கத்தில் இவரையும் சேரும்படி அவ்விடத்து ஜனங்கள் வேண்டினார்களென்றும் இவர் மறுத்துவிட்டதாகவும் அங்கு வேடிக்கையாகப் பேசிக்கொள்கிறார்கள். இப்பெரிய பயங்கர யுத்தத்திற்கு ஏற்பாடு செய்தபொழுது, ஜெர்மன் சக்கரவர்த்தி தாம் தோற்றுவிட்டால் சென்று சுகமாகக் காலம் கழிப்பதற்காக அமெரிக்காவில் ஏராளமான சொத்துக்களைச் சேர்த்துத் தயார் செய்து கொண்டிருக்கிறாரென்று நிதி நிபுணர்களிற் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஸ்ரீ விவேகாநந்த மஞ்சரி.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனிடத்தில் "என்னில் மாத்திரம் நீ அபயம் அடைந்துகொள், மற்றெல்லாக் கர்மங்களையும் விட்டுவிடு, நான் உன்னை ரட்சிப்பேன்" என்று கூறினார். பாலசந்திரன் என்னும் ஒருவன் தனது ஜனங்களிடத்திலிருந்து இவ்வுபதேசத்தைக் கேட்டு மிகச் சந்தோஷமடைந்தான். ஆகையால அவன் "பகவானிடத்தில் சரணடைந்து விட்டேன், எனக்குப் பயமேது? நான் செய்ய வேண்டியது யாது இருக்கின்றது?"

என்று இடி இடித்ததுபோல அடிக்கடி சத்தமிடுவான். திசைகள் திடுக்கிடும்படியாக இவ்வார்த்தைகளை யுரக்கக்கத்துதல்தான் பக்தியின் லட்சணம் என்று பாலசந்திரன் நினைக்கிறான். பகவான் பொருட்டுத் தன்னுடைய ஜீவனையும் தியஜிக்க எப்பொழுதும் தயாராயிருப்பதாக, அவன் அடிக்கடி, அம்மாதிரியே சத்தமிட்டுக் கூறுகிறான். ஆ! அத்தகைய பக்திக்கு பகவான் வசமாகாவிட்டால், எல்லாம் பொய்யே யென்று தீர்மானிக்கப்படவேண்டும். அவனுடைய, களிமண்ணாலாக்கப்பெற்ற மூளைகளையுடைய ஸ்நேகிதர்களிற் சிலரும் அங்ஙனமே நினைக்கின்றார்கள். ஆனால் பாலசந்திரன் பகவான் பொருட்டு தன்னுடைய கெட்ட அப்பியாசங்களில் எதையும் விட்டுவிடத் தயாராயில்லை. நல்லது, அத்தகைய விஷயங்கள் நம்மையே ஏமாற்ற முடியாத பொழுது அவன் நினைக்கிறதுபோல ஏமாற்றப்படுவதற்கு ஈஸ்வரன் முட்டாளா?

*   *   *   *

பாலபூரி யென்பவர் மகா வேதாந்தி—எடுத்தவற்றி லெல்லாம் தாமும் பிரஹ்மமும் ஒன்று என்பதற்குள்ள பிரமாணங்களையெடுத்துக் காட்டுகிறார். சுற்றிலுமுள்ள ஜனங்கள் பசிநோயாற் பீடிக்கப்பட்டுப் பொறுக்க முடியாது பரிதாபகாமான கூக்குரலிட்டு அலறினாலும் பாலபூரிக்கு அதனால் மனங்கலங்காது, சுகம் துக்கம், இவற்றினுடைய பொய்மையை ருசுப்படுத்துவதற்கு அவர் உடனே உட்கார்ந்து விடுகிறார். மனிதர்கள் எல்லாரும் துன்பம், பிணி, பசி இவற்றால் மரித்தாலும், அதனால் அவருக்கென்ன? அவர் உடனே ஆத்மாவின் நித்தியத்துவத்தைப் பற்றிச் சிந்தனை செய்ய ஆரம்பித்து விடுகிறார்! அவருக்கு முன்பாகவே பலவான் பலயீனனைக்கொன்றாலும் கூட, அவர் "ஆத்மா கொல்லாதது, கொல்லவும் படாதது" என்ற சுருதிவாக்கியத்தின் மகத்தான கருத்தைத் தியானம் செய்வதில் ஆநந்தம் மிகுந்து தன்னை மறந்து விடுகிறார். ஆனால் பாலபூரிக்கு—எந்த வேலையாயினும் சரியே—வேலைசெய்வ தென்றால் பெருங்கஷ்டம். கர்மம் செய்ய வேண்டுமென்று அவரைக் கட்டாயப்படுத்தினால், தமது முன் ஜன்மத்தில் தாம் எல்லாக் கர்மங்களையும் செய்துமுடித்து விட்டதாக அவர் கூறுகிறார். ஆனால், பிரஹ்மமும் தாமும் ஒன்று என்பதில் ஒரு விஷயம் தான் சிறிது குழப்பத்தை யுண்டாக்குகின்

றது. தமக்குக்கிடைத்த பிட்சை போதாதுபோய் விட்டாலும் அல்லது நன்ருயிராவிட்டாலும் அல்லது கிரகஸ்தர்கள் முறைப்படித் தம்மைப் பூஜிக்காவிட்டாலும், கிரகஸ்தர்களைப்போலக் கெட்டவர்களும் இழிந்தவர்களும் வேறு எவரும் இல்லையென்று அவர் கோபம்பொங்கிக் குதிப்பார்; அவருடைய இச்சைப் பிரகாரம் அவரை எந்த கிராமமாவது ஆசார உபசாரங்களுடன் வரவேற்காவிடில், அப்பேர்ப்பட்ட கிராமம் பூமாதாவுக்குப் பாரமாய் இன்னும் ஏன் இருக்கிறதென்று கத்துகின்ருர்.

* * *

நன்மையானது உண்மையின் அருகில் இருக்கிறது, ஆயினும் அது உண்மையன்று.

* * *

தைர்யமாயும் உண்மையுள்ளவனுயும் இரு. பக்தியுடன் எந்த மார்க்கத்தையாவது தொடர்ந்து செல்; நீ பரிபூர்ணத்துவத்தையடையத்தான் வேண்டும்.

* * •

மரத்தின் வேருக்குத் தண்ணீர் விட்டால், மரம்முழுதுக்கும் தண்ணீர்விட்டாய்விட்டது; ஈஸ்வரனை யடைந்தால், நாம் எல்லாவற்றையும் அடைகிரும்.

* * *

நீ அந்தமற்றவன் என்று அறிந்து கொள்; அப்படியாயின் பயம் பறந்துவிடும்.

* * *

முக்கியமாக ஆரம்பத்தில், எல்லா தீய சங்கத்தையும் விட்டுவிடு. உலக சங்கத்தைவிட்டுவிடு; இது உனது மனத்தைக் கலைத்துவிடும். "நான்," "எனது" என்பவற்றை விட்டுவிடு. பிரபஞ்சத்தில் ஒன்றுமற்றவனிடத்தில் ஈஸ்வரன் வருகிருர்.

* * *

ஜீவிதமும் மரணமும் ஒரேவிஷயத்தின் வெவ்வேறு பெயர்களேயாகும்; ஒரே நாணயத்தின் இருபக்கங்களாகும்.

* * •

உலகம் எனக்காக, நான் உலகத்துக்காகவன்று. நன்மையும் தீமையும் நமது அடிமைகள்; நாம் அவற்றிற்கு அடிமைகளல்ல.

இருந்த விடத்திலேயே யிருப்பது மிருகஸ்வபாவம்; நன்மையைத் தேடி, தீமையைவிலக்குவது மனிதஸ்வபாவம்; நன்மையையாவது தீமையையாவது நாடாது என்றும் ஆநந்தமா யிருப்பது ஈஸ்வர ஸ்வபாவம்.

தெளிவு.

(23-6-13)

தாயுமானவர் ஆநந்தக்களிப்பு மெட்டு.

(சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ)

ஆநந்த மாகடல் சேர்ந்தேன்—இங்கு
அனைத்தினும் நானுள தன்மை யுணர்ந்தேன்
ஈனந் தனையெலாம் விட்டேன்—இங்கு
இன்பக் கடலிலே மூழ்கித் திளைப்பேன் (1)

எல்லாம் சிவமென்று கண்டேன்—இங்கு
இலகுயிர் ஒன்றினும் எனையன்றிக் காணேன்
பொல்லாத மாயையும் விண்டேன்—இந்தப்
புழுமலக் கூடுநா னல்லவென் றோர்ந்தேன் (2)

புல்லும் பூண்டும்நா னென்றேன்—அந்தப்
புதிய சுடர்விடு கதிரும்நா னென்றேன்
கல்லு மணலுநா னென்றேன்—அந்தக்
கதிரவன் மதியவன் ஒளியுநா னென்றேன் (3)

வானகம் மண்ணகம் நானே—அங்கு
வகைவகை யாத்திகழ் உயிர்த்திரள் யானே
தேனக மலர்களும் யானே—அவை
திகழும் நிறமும் எழில்களும் யானே (4)

மரமும் செடிகளும் நானே—அந்த
வனத்திற் றிகழ்ந்திடு வியப்பெலாம் நானே
கரடிகள் புலிகளும் நானே—அந்தக்
காட்டிற் றிரிந்திடு விலங்குகள் யானே (5)

விண்ணில் இயங்கிடு புள்ளெலாம் யானே—அங்கு
வேறுவே றுய்த்திகழ் கோளமும் யானே
கண்ணிற் றிகழ்ந்திடு காட்சிகள் யானே—இங்கு
கலைவலோர் புலவர்கள் கவிகளும் யானே (6)

மணிகொள் நெடுந்திரை வாரியும் யானே—அங்கு
வாழ்ந்துயிர் மாய்ந்திடும் உயிர்களும் யானே
அணிகொள்த டாகங்கள் சோலைகள் யானே—அங்கு
அழகழகாய்த் திகழ் பொருள்களும் யானே (7)

நீல மணிக்கடல் எனத்திகழ் வானும்—அங்கு
நிலையின்றி மாறிடுந் தோற்றமும் யானே
சாலவும் நன்மைகள் யானே—இந்தத்
தரணியில் இன்பமும் துன்பமும் யானே (8)

அண்டமும் பிண்டமும் யானே—இங்கு
ஆதி யந்தமில் சோதியும் யானே
கண்டதும் காண்பதும் யானே—இங்கு
கரையில் உவகையில் குளிப்பவன் யானே. (9)

ப. சு. நெல்லையப்பபிள்ளை.

சமாச்சாரக் குறிப்புகள்.

இம்மாதத்தில் ஸ்ரீகிருஷ்ணனது ஜனனதினம் இந்தியா முழுதும் கொண்டாடப்படுகின்றது ஸ்ரீகிருஷ்ணன் என்று இப்பூவுலகில் அவதரித்தாரோ, அன்றுதான் இந்திய ஜனசமுகமும் பிறந்தது. இவருக்கு முன் எத்தனையோ மகாத்துமாக்களும் அவதார புருஷர்களும் தோன்றி மானிட வர்க்கத்தை மேம்பாடடையச்செய்திருந்த போதிலும், அவர்களெல்லாரும் நிவிருத்தி மார்க்கத்தையே உபதேசித்தார்கள்; விரக்தியையே போதித்தார்கள். பிரபஞ்சம் பொய்யென்று புகன்று பிரபஞ்ச வெறுப்பையுண்டாக்கினார்கள். ஸ்ரீகிருஷ்ணன் ஒருவர்தாம் நிஷ்காம்ய கர்மயோகத்தை முகதி மார்க்கமாக உபதேசித்து பிரவர்த்தியில் நிவிருத்தியையும் நிவிருத்தியில் பிரவிருத்தியையும் போதித்தார். அணுவுக்கணுவாகி யிருக்கும் பிரஹ்ம வஸ்துவை மகத்துக்கு மகத்தாகிப் பார்க்கும் விதத்தை ஸ்ரீகிருஷ்ணனே உபதேசித்தார். வர்

ணபேதமும் ஆஸ்ரமபேதமும் வகித்தும் அவையற்று விளங்கிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்ம ஸ்வரூபமே நாம் எப்பொழுதும் தியானித் தற்குரியது; ஸ்ரீகிருஷ்ணனது உபதேசங்களே நம்நாட்டை உயர் நிலையில் கொண்டு வருதற்கேற்றன. ஸ்ரீகிருஷ்ணனை இந்திய ஜனசமுகம் எந்நாள்வரையில் மறவாமலிருக்கின்றதோ, அந்நாள் வரையில் இந்திய ஜனசமுகம் பயமற்று வாழலாமென்பதில் சந்தேகமில்லை.

* * * *

நாம் ஜெர்மனியுடன் யுத்தம்தொடங்கி ஒருவருஷம் ஆய் விட்டது. புலியைக் கூண்டிற்குள் அடைத்து விட்டதுபோல, ஜெர்மனியின் வெளியுலக சம்பந்தத்தை அழித்துவிட்டோம். இனிமேல் ஜெர்மனி அடங்காமல் என் செய்யும்? ஆதலால் நாம் இந்த யுத்த வருஷாந்தரக் கொண்டாட்டத்தைக் கொண்டாடி நமக்கு மேன்மேலும் வெற்றியும் சாந்தியும் அளிக்குமாறு ஈஸ் வரனைப் பிரார்த்திக்கிறோம்.

* * * *

இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தம் எல்லாவற் றிற்கும் குறுக்கே நிற்கின்றது. குக் என்னும் பெயருடைய சாஸ் திரக்ஞர் ஒருவர் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்திருக்கிறார். அவர் ஹிமோத்கிரியின் மகா உன்னதமானசிகரமாகிய எவரெஸ்ட் மலைக்குச் செல்ல விரும்புகிறார். அவர் அமெரிக்கர். ஒருவரும் இதுவரைக் காணாததேசத்தைக் காணப் பிரயத்தனப்படுவதே இவருடைய இயற்கை. எவரெஸ்ட் சிகரமானது உலகில் உயர்ந்த மலையாகும். 25000 அடிக்குமேல் 30000 அடிவரையில் உயர முள்ளது. இதுவரை இதன் உச்சிக்கு மனிதர் சென்றதில்லை. ஆகையால்தான் இந்தச்சிகரத்தை முதன் முதலாவதாகப் பார்வை யிடும் பெருமையைத் தாம் அநுபவிக்கவேண்டுமென்று குக் ஆசைப்படுகிறார். ஆனல் இந்தயுத்தமானது இவருடைய ஆசைக் குக் குறுக்கே அணையிட்டதுபோல வந்து நிற்கிறது. இந்த யுத் தம் முடியும்வரையில் எல்லையை எவரும் கடந்துசெல்லுதல் கூடாதென்று இந்திய அரசாங்கத்தார் ஒரு உத்தரவு முன்ன மேயே பிறப்பித் திருக்கின்றனர். இந்தப் பொது உத்தரவுக்கு விரோதமாக இவருக்கு மாத்திரம் அநுமதிகொடுப்பார்களா? என்பது தான் சந்தேகமாயிருக்கிறது. இவர் இப்பொழுது கல்கத்

தாவில் இருக்கும் அமெரிக்கப் பிரதிநிதியையும் கல்கத்தா நகரப் போலீஸ் தலைமையதிகாரியையும் நேரிற்கண்டு பேசியிருக்கிறார். அரசாங்கத்தார் விதிக்கின்ற எத்தகைய நிபந்தனைகட்கும் தாம் கட்டுப்படுவதாகவும் ஹிமோத்கிரி பர்வதத்தின் உயரச் செல்லு தற்கு அநுமதி தரவேண்டுமென்றும் அரசாங்கத்தாரைக் கேட்டிருக்கின்றனர். இவர் அமெரிக்கர் என்பது வாஸ்தவமாயினும், இவர் ஜெர்மன் அமெரிக்கரா? ஆங்கில அமெரிக்கரா? தெரியவில்லை

* * * *

வட இந்தியாவிலும் இன்னும் சிலபிரதேசங்களிலும் அச்சுக்கூடச்சட்டம் அளவற்ற அதிகாரம் செலுத்திவருகின்றது. காரணமும் தெரிவிக்காமலே எந்தப் பத்திரிகையிடத்திலும் ஜாமீன்கேட்கலாம் என்றவிதியொன்று அச்சட்டத்தில் இருப்பது ஏழைப்பத்திராதிபர்களுக்கு ஆபத்தாக முடிகின்றது. போலீஸாரைப்பற்றியாவது நியாயாதிபதிகளைப் பற்றியாவது குறைகூறி எழுதும்பத்திரிகைகள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஒருபத்திரிகையை நிறுத்தவேண்டுமென்றுமாத்திரம் எந்த நியாயாதிபதியாவது மனத்தில்கொண்டு பேனாவை மையில் தோய்த்துவிட்டால், அந்த மை உலர்வதற்கு முன்னதாகவே அந்தப் பத்திரிகை நின்றாலும் நின்றுவிடும். அந்தப் பத்திரிகையின் வேர் சிறிதுபலமாய் ஆழ்ந்து இறங்கியிருந்தால், அச்சுக்கூடச் சட்டத்தின் அநேகவிதிகளினால் அப்பத்திரிகை அநேகந்தரம் ஆட்டப்பட்டு அசைந்து சீக்கிரத்தில் விழுந்துவிடும். இங்ஙனம் வட இந்தியாவில் அநேகதேசபாஷைப் பத்திரிகைகள் நின்றுவிட்டன. தென்னிந்தியாவில் அச்சுக்கூடத்தின் அதிகாரம் அவ்வளவு ஊர்ஜிதமாயில்லையே என்றால், தென்னிந்தியப்பத்திரிகைகள் சாதுப் பத்திரிகைகள் தானே! வாழ்த்துப்பாக்களும் இரங்கற்பாக்களும் நமது பத்திரிகைகள் பிரசுரித்துக் கொண்டிருக்கும் வரையில் அச்சுக்கூடச் சட்டத்தை நாம் லட்சியம் செய்யவேண்டிய அவசியமேயில்லை.

பலவிஷயக் குறிப்புகள்.

வுட்ஸ் ஹச்சின்ஸன் யென்னும் வைத்திய நிபுணர் பின்வருமாறு கூறுகிறார்:—நமது இந்திரியங்களுக்குள் முதன்மைபெற்றதாகவும் மிகமிக முக்கியமானதாகவும் கிராணேந்திரியத்தை (மூக்கைப்) பிரகிருதி யுண்டாக்கியிருப்பது யதேச்சையா யேற்பட்டதன்று. ஒவ்வொரு கவள ஆகாரத்தையும் நாம் உட்கொள்ளுவதற்குமுன், ஒவ்வொரு ஸ்வாசத்தையும் நாம் நமது ஸ்வாசப்பைக்குள்ளிழுப்பதற்கு முன், நமது இயற்கையமைப்புக்களில் முதன்மை பெற்றதும் முக்கியமானதுமான அந்தக் கருவியின் (மூக்கின்) தீர்ப்புக்கு அடங்கி, அதன் பிரகாரம் தவறாமல் நடப்போமாயின், சரீரத்தைப் பீடிக்கின்ற வயிற்றுரோகம், க்ஷயரோகம் முதலிய தீமைகளில் குறைந்த பட்சம் பகுதியையாவது நாம் நீக்கிவிடலாம். எப்பொழுதும் மூக்காலுறிஞ்சிப் பார்த்தலே ஆரோக்கியத்தின் விலையாகும். நீ எங்கிருந்தாலும் சரி, நல்ல வாசனையுள்ளதை மாத்திரம் உட்கொள், நல்ல ருசியுள்ளதை மாத்திரம் விழுங்கு, அல்லாதனவற்றைச் சிறிதும் யோசனை செய்யாமல் தள்ளிவிடு. போதுமான வாசனை யிருக்கிறதென்று நீ உணருகிற வரையில் உட்கொள்; மற்றவற்றை உனது இரைப்பை செய்து கொள்ளுமென்று நீ நம்பிவிடலாம். இதுவே அஜீர்ணத்திற்கு "நிச்சயமான நிவிர்த்தி."

* * *

மலைகளடர்ந்த காட்டுத்தேசத்தில் அநேக சிங்கங்கள் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு மலைச்சந்துகளின் இடையே மற்ற மிருகங்களைத் தூரத்துப்பொழுதுதான் பெரும் கர்ச்சனைசெய்கின்றன. மற்றச் சமயங்களில் சிங்கத்தின் சப்தம் அவ்வளவு உரத்ததாயிருக்கின்றதில்லை யென்று சொல்லப்படுகின்றது. மாலை நேரங்களில் இது இடுகின்ற ஒருமாதிரியான சத்தம் பெரிதாயிருந்தபோதிலும், அது கர்ச்சனையன்று; வீண் கூவுதலாகும். அது உல்லாசமாக நடந்து திரியும்பொழுது கூச்சலிடுவதில்லை. வயிறு நிறைய உண்ட பின்னர், சில சிங்கங்கள் தமக்குத் திருப்திகரமான ஆகாரம் கிடைத்த மகிழ்ச்சியினால் சிலதடவை கூச்சலிடும். காட்சி பங்களாக்களில் அடைக்கப்பட்ட சிங்கங்கள் ஆகார சமயத்தில் இடும் கூச்சலினால் அந்தக் காட்சி பங்களாவே அசைந்து ஆடுவது போலத் தோற்றினும், இக்கூச்சல் மிக அமைதியானதே. ஆனால் ஏழு அல்லது எட்டு சிங்கங்கள் சேர்ந்துகொண்டு மற்ற

மிருகங்களை மலைச்சந்துகளில் துரத்தி வேட்டைக் கூச்சலிடும் பொழுதுதான் பயங்கரமான சத்தம் உண்டாகிறது. இந்தச் சத்தம் குறைந்தது ஐந்துமைல் தூரமாவது கேட்கும்; பூமிஅதிரும்; ஆகாயம் கிடுகிடு என்னும்.

* * *

பூமியில் சகல பிராணிகளுக்குள்ளும் திமிங்கலமே நீண்டகாலம் ஜீவிக்கின்றது. இதன் வயது 1000 வருஷங்கள் என்று சொல்லப்படுகின்றது; யானையானது சுகமாகவும் ஸ்வயேச்சையாகவும் வளர்ந்தால் 400 வருஷங்கள் ஜீவிக்கின்றது. மகா அலெக்ஸாந்தர் என்பவன் இந்தியாவின்மீது படை யெடுத்துவந்து, புருரவச் சக்கிரவர்த்தியைத் தோற்கடித்து, ஜெயத்துடன் தனது ஸ்வதேசத்திற்குத் திரும்பியபொழுது இங்கிருந்து ஒரு யானையைக் கொண்டு சென்றான். அதற்கு "அஜேக்ஸ்" என்னும் பெயர் கொடுத்து சூர்யனுக்குச் சமர்ப்பித்து ஒரு செம்புத்தகட்டில் "பிரகஸ்பதியின் புத்திரனாகிய அலெக்ஸாந்தர் சூர்யனுக்கு அஜேக்ஸைச் சமர்ப்பித்தான்" என்று எழுதுவித்து அந்த யானையின்மீது கட்டிவிட்டான். அந்த யானை இதற்குப்பின் 350 வருஷங்கள் ஜீவித்திருந்தது. பூனைக்கு வயது பதினைந்து; அணில்களுக்கு எழு அல்லது எட்டு; குழி முயல்களுக்கு எழு: காடி அநேகமாக இருபது வருஷங்களுக்குமேல் இருப்பதில்லை. ஓநாய்க்கு பதினைந்து முதல் பதினாறு வரையில். சிங்கங்கள் வெகுகாலம் ஜீவிக்கின்றன. எழுபது வருஷங்கள் ஜீவித்ததாகச் சொல்லப்படுகிறது. பன்றிகளுக்கு வயது இருபது; குதிரைகளுக்கு அறுபது. ஆனால் குதிரைக்குச் சராசரி வயது இருபத்தைந்துக்கு மேல் முப்பது வரையில் தான். சில சமயங்களில் ஒட்டகங்கள் நூறு வருஷங்கள் ஜீவிக்கின்றன; அப்படியே கழுகுகளும். அண்டங்காகங்கள் அநேகமாக நூறு வருஷங்கள் உயிர்வாழ்கின்றன. அன்னப்பட்சிகள் 300 வருஷங்கள் இருக்கின்றன. ஒரு ஆமை 107 வருஷங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

* * *

சிங்கத்திற்கு ஒரு நிமிஷ நேரத்தில் 40 தரம் தாது துடிக்கின்றது. புலிக்கு 93 தரமும் கழுகுக்கு 160 தரமும் தாது துடிக்கின்றது. யானையின் தாதுத் துடிப்பைக்கணிக்க முடியவில்லை. ஆனால் வண்ணாத்திப்பூச்சிக்கு ஒரு நிமிஷத்திற்கு 60 தரம் தாது துடிக்கின்றது.